வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2072/அ3/2022 நாள் 12.07.2022

----

பொருள் : பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு / நகராட்சி / உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 2022-2023ஆம் கல்வியாண்டில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தற்காலிக அடிப்படையில் நிரப்புதல் – தொடர் நடவடிக்கை மேற்கொள்ளக் கோருதல் – சார்பு.

பார்வை : சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.34087/சி2/இ2/2022 நாள் 23.06.2022, 01.07.2022 மற்றும் 11.07.2022

----

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி ஆணையரின் 23.06.2022, 01.07.2022 மற்றும் 11.07.2022 நாளிட்ட செயல்முறைக் கடிதங்களின்படி இத்துடன் இணைத்துள்ள அறிவுரைகளை பின்பற்றி கால அட்டவணையின்படி பணிகளை மேற்கொள்ளும் வகையில் அனுப்பப்படுகிறது.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 328 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் மட்டுமே தற்காலிக நியமனம் மேற்கொள்ள வேண்டும்.
2. உரிய கல்வித் தகுதிகள் பெற்று, பார்வைகளில் உள்ள கடிதங்களில் கூறப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்களை பரிசீலித்து தேர்வு செய்ய தெரிவிக்கப்படுகிறது.
3. படிவம் 1 மற்றும் 2 தீர்மான நகல் இணைத்து முதன்மைக் கல்வி அலுவலக "அ3" பிரிவில் நேரில் 16.07.2022 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும் பார்வைகளில் காணும் கடிதங்களில் கூறப்பட்ட அறிவுரைகளை பின்பற்றி எவ்வித புகாருக்கு இடமின்றி செயல்படவும், தகுதியற்ற நபர்களுக்கு தற்காலிக நியமனம் வழங்கப்படின் சார்ந்த தலைமை ஆசிரியரே முழு பொறுப்பேற்க நேரிடும் என திட்வட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :
1. பார்வையில் காணும் பள்ளிக் கல்வி ஆணையரின் 23.06.2022, 01.07.2022, 11.07.2022 நாளிட்ட கடித நகல்கள்
2. படிவம் 1 மற்றும் 2
3. விண்ணப்பங்களை பெறுவது சார்ந்த அட்டவணை
4. நிரப்ப வேண்டிய பட்டதாரி ஆசிரியர்கள் காலிப் பணியிடங்கள் பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

12/07/2022

பெறுநர்
1. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு
தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது
2. அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

## <u>படிவம் – 1</u>

பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடத்தில் (2022-23) தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் சார்ந்த வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் சார்ந்த விவரம்.

பள்ளியின் பெயர் :

| வ. எண். | பணிநாடுநரின் பெயர் | பாடம் | பணிநாடுநரின் முகவரி | பட்டதாரி ஆசிரியர் தெரிவுக்கென ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சி பெற்றவரா? (ஆம் / இல்லை) | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

மேற்கண்ட விண்ணப்பங்கள் மட்டும் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்டது எனச் சான்றளிக்கின்றேன்.

தலைமை ஆசிரியர் கையொப்பம்,
பள்ளி முத்திரையுடன்

# படிவம் - 2

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / நகராட்சி / உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தற்காலிகமாக நிரப்ப தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட வேண்டியவர்கள் விவரம்.

பள்ளியின் பெயர்:

| வ. எண். | தற்காலிகமாக நியமனம் செய்யப்பட வேண்டிய ஆசிரியரின் பெயர் மற்றும் அலைபேசி எண். | பாடம் | பிறந்த தேதி | கல்வித்தகுதி | பட்டதாரி ஆசிரியர்கள் தெரிவுக்கான ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற விவரம் (ஆவணங்கள் இணைக்கவும்) | மனுதாரர் வசிக்கும் பகுதி முழு முகவரி. | எந்த அடிப்படையில் இவரின் நியமனம் மேற்கொள்ளப்பட்டது (முழு விவரம்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**குறிப்பு**

1. இப்படிவத்தினை பாடவாரியாக தனித்தனியாக வழங்கப்படவேண்டும்.
2. மேற்காண் நபர் தேர்ந்தெடுக்கப்பட்டது சார்ந்து தேர்வுக்குழு உறுப்பினர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் கையொப்பத்துடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல் இணைத்து அளிக்க வேண்டும்.
3. மூன்று நகல்களின் அளிக்க வேண்டும்.

**சான்று**

1. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டது.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.34087/சி2/இ2/2022 நாள் 23.06.2022, 01.07.2022 மற்றும் 11.07.2022களில் கூறப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மேற்கண்ட பட்டியலில் உள்ள நபர் தேர்ந்தெடுக்கப்பட்டார் எனச் சான்றளிக்கிறேன்.

பள்ளி மேலாண்மைக் குழு
தலைவர் கையொப்பம்
(பெயர் : )
கைப்பேசி எண்.:

பள்ளித் தலைமை ஆசிரியர்
கையொப்பம்
(பெயர் : )
கைப்பேசி எண்.:

<u>அட்டவணை</u>

| | | |
|---|---|---|
| i | மாவட்டக் கல்வி அலுவலகங்களில் பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டிய நாள் | 12.07.2022 மற்றும் 13.07.2022 |
| ii | மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை 01.07.2022 நாளிட்ட செயல்முறைகளில் பத்தி 5ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி தேர்வு குழு பரிசீலித்து தகுதியான நபரை இறுதி செய்ய வேண்டிய நாட்கள் | 14.07.2022 மற்றும் 15.07.2022 |
| *iii* | ***தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்ட தகுதியான நபர் குறித்த பட்டியலை படிவம் 1 மற்றும் 2 உடன் இணைத்து பள்ளி மேலாண்மைக் குழு தீர்மான நகலுடன் இணைத்து முதன்மைக் கல்வி அலுவலக "அ4" பிரிவில் தலைமை ஆசிரியர் சமர்ப்பிக்க வேண்டிய நாள்*** | *16.07.2022* |
| iv | தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்ட பட்டியலை கூர்ந்தாய்வு செய்து முதன்மைக் கல்வி அலுவலர் ஏற்பளிக்க வேண்டிய நாள் | 18.07.2022 |
| v | முதன்மைக் கல்வி அலுவலரால் ஏற்பளிக்கப்பட்ட தற்காலிக நியமனத்திற்கு பள்ளி மேலாண்மைக் குழுவின் ஒப்புதல் பெறப்படவேண்டிய நாள் | 19.07.2022 |
| vi | தற்காலிக நியமனம் பெற்றவர் பணியில் சேர்க்கப்பட வேண்டிய நாள் | 20.07.2022 |